# மாகாணக்கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

## நிலையறி பரீட்சை – 2021

தரம் 9 வரலாறு நேரம் -2 மணித்தியாலங்கள்

### பகுதி I

சரியான விடையைத் தெரிவு செய்க.

1. கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஒல்லாந்தர், தலைமையகத்தினை நிறுவிய தீவையும் நகரத்தினையும் தருகின்ற விடையைத் தெரிவு செய்க.
   (1) ஜாவாத் தீவு – பத்தேவியா
   (2) சுமாத்திரா தீவு – மேடென்
   (3) ஜாவாத் தீவு – சுரபாயா
   (4) சுமாத்திரா – பகன்பரு

2. கி.பி.1602 ஆம் ஆண்டு ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன் என்ற ஒல்லாந்துத் தளபதி இலங்கையில் வந்திறங்கிய துறைமுகம் எது?
   (1) காலி
   (2) திருகோணமலை
   (3) மட்டக்களப்பு
   (4) கொழும்பு

Education கல்வி அධ්‍යාපන

3. கி.பி 1638 ஆம் ஆண்டு ஒல்லாந்தருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கண்டி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) செனரத்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இரண்டாம் இராஜசிங்கன்

4. இலங்கையின் பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய கண்டி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) செனரத்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இரண்டாம் இராஜசிங்கன்

5. இலங்கையில் உரோமன் டச்சுச் சட்டத்தை அறிமுகப்படுத்திய ஐரோப்பிய இனத்தவர் யார்?
   (1) ஒல்லாந்தர்
   (2) பிரான்சியர்
   (3) பிரித்தானியர்
   (4) போர்த்துக்கேயர்

kalvi.lk

6. மேலைத்தேச, கீழைத்தேச வர்த்தகப் பாதையின் மத்திய நிலையமாக அமைந்திருந்த நாடு எது?
   (1) இந்தியா
   (2) இலங்கை
   (3) இந்தோனேசியா
   (4) சீனா

7. இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய பிரித்தானியரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி அப்பிரதேசங்களில் வரியை அறவிடுவதற்கு நியமித்த சென்னை அதிகாரிகள் யார்?
   (1) அவுமில்தார்
   (2) முதலியார்
   (3) விதானை
   (4) கலெக்டர்

8. இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் யார்?
   (1) பிரட்டிக் நோர்த்
   (2) றொபேட் பிறவுண்றிக்
   (3) தோமஸ்மெயிற்லண்ட்
   (4) ஆளுநர் டொரிங்டன்

9. கண்டி இராசதானியின் இறுதி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இராஜாதி இராஜசிங்கன்

10. கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆளுநர் தோமஸ் மெயிற்லண்ட் நியமித்த உத்தியோகஸ்தர் யார்?
   (1) மக்டோவல்
   (2) மியுரன்
   (3) ஜோன் டொயிலி
   (4) முத்துச்சாமி

11. 1818 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது சுதந்திர போராட்டம் ஊவா வெல்லசப் பிரதேசத்தில் ஆரம்பித்த போது அக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் யார்?
   (1) கெப்பட்டிபொல நிலமே
   (2) மடுகல்லே திசாவை
   (3) பூட்டாவே ரட்டேரால
   (4) உடகம்பஹ நிலமே

12. பிரித்தானியரால் இலங்கையில் முதன்முதல் வர்த்தக நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பயிர் எது?
   (1) தேயிலை
   (2) இறப்பர்
   (3) கோப்பி
   (4) சிங்கோனா

Education கல்வி அධ්‍යාපන

13. இலங்கை மக்களுக்கு சர்வசனவாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்பு எது?
   (1) கோல்புறூக் அரசியல் யாப்பு
   (2) டொனமூர் அரசியல் யாப்பு
   (3) சோல்பரி அரசியல் யாப்பு
   (4) மனிங் அரசியல் யாப்பு

14. இலங்கையின் உலர் வலயத்தில் அரசுக்கழகக் காலத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்த தலைவர் யார்?
   (1) S.W.R.D பண்டாரநாயக்கா
   (2) C.W.W கன்னங்கரா
   (3) டட்லி சேனநாயக்கா
   (4) D.S சேனநாயக்கா

15. இலங்கையில் பிரம்மஞான சங்கம் நிறுவப்படக் காரணமாக இருந்தவர் யார்?
   (1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
   (2) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
   (3) அநகாரிக தர்மபால
   (4) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

16. இந்துக் கல்விச் சபை,சைவபரிபாலன சபை என்பவற்றை அமைத்து இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தலைவர் யார்?
   (1) சேர். பொன் இராமநாதன்
   (2) சேர். பொன் அருணாசலம்
   (3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   (4) சு. நடேசு ஐயர்

Education கல்வி අධ්‍යාපන

17. பிரான்சியருடைய கீழைத்தேச வர்த்தக மையங்களில் ஒன்று எது?
   (1) சென்னை
   (2) மும்பை
   (3) பாண்டிச்சேரி
   (4) கோவா

18. இந்தியாவில் மொகலாயப் பேரரசை ஸ்தாபித்தவர் யார்?
   (1) பாபர்
   (2) அக்பர்
   (3) ஜகாங்கீர்
   (4) சாஜஹான்

19. இந்திய சுதந்திர போராட்டத்தின் போது பாகிஸ்தான் என்னும் வேறொரு நாட்டை உருவாக்குவதற்கான இயக்கமொன்றை முன்னெடுத்துச் சென்ற தலைவர் யார்?
   (1) ஜவகர்லால் நேரு
   (2) மொகமட் அலி ஜின்னா
   (3) பாலகங்காதர திலகர்
   (4) சுரேந்திரநாத் பெனர்ஜி


20. இந்திய தேசிய சங்கத்தின் முதல் தலைவர் யார்?
   (1) W.C. பெனர்ஜி
   (2) தாதாபாய் நவ்ரோஜி
   (3) சுரேந்திரநாத் பெனர்ஜி
   (4) பாலகங்காதர திலகர்

## பகுதிII

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய இடங்களையும் அதற்குரிய ஆங்கில எழுத்துக்களையும் இலங்கைப்படத்தில் இனங்கண்டு 1 – 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
   i. பிரித்தானியர் வந்திறங்கிய திருகோணமலைத் துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்து.
   ii. 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கைப்பற்றிய யாழ்ப்பாணத்தினைக் குறிக்கும் எழுத்து
   iii. 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட கண்டி இராச்சியத்தினைக் குறிக்கும் எழுத்து.
   iv. ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்படக் காரணமாக இருந்த நீர்கொழும்புக் கோட்டையைக் குறிக்கும் எழுத்து.
   v. தென்னைச் செய்கை பரவியிருந்த சிலாபத்தினைக் குறிக்கும் எழுத்து
   vi. சிவில்ராத் நீதிமன்றம் அமைக்கப்பட்ட காலியைக் குறிக்கும் எழுத்து

(12 புள்ளிகள்)




kalvi.lk

2.

i. கண்டி இராச்சிய மன்னர்களைச் சந்தித்த ஒல்லாந்து நாட்டு தூதுவர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

ii. ஒல்லாந்தத் தூதுவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திய பின்வரும் ஆண்டுகளில் கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களைத் தருக.

1. 1602
2. 1656
3. 1721 (03 புள்ளிகள்)

iii. 1638 ஆம் ஆண்டில் கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள மூன்று விடயங்களைத் தருக (03 புள்ளிகள்)

iv. இரண்டாம் விமலதர்ம சூரியனும் ஒல்லாந்தரும் பின்பற்றிய நட்பு ரீதியான மூன்று தொடர்புகளைத் தருக. (03 புள்ளிகள்)

3.

(i) ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த மூன்று கொமாண்டரிப் பிரதேசங்களையும் தருக. (03 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்த ஆளுநருக்கும் கொமாண்டர்களுக்கும் கீழிருந்த நிர்வாகப் பிரிவுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தரின் ஆட்சியில் திசாவனியின் கீழிருந்த இரண்டு பிரிவுகளைத் தருக. (02 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

(iv) ஒல்லாந்தர் கறுவா பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட நான்கு பிரதேசங்களைத் தருக. (04 புள்ளிகள்)

4.

(i) பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக இருந்த மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) இரட்டை ஆட்சி என்பதனால் நீர் கருதுவது யாது? (03 புள்ளிகள்)

(iii) கண்டிப் பிரதேசத்தில் சுதந்திரமான தனி அரசு ஒன்று இருப்பதைப் பிரித்தானியர் விரும்பாமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iv) 1803 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைக் தாக்கிய பிரித்தானியப் படைகள் எதிர் நோக்கிய மூன்று பிரச்சினைகளைத் தருக. (03 புள்ளிகள்)

5.

(i) இலங்கையில் கடமையாற்றியபிரித்தானிய ஆளுநர்களில் பின்வரும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களைத் தருக.

a. 1855 இல் நீர்ப்பாசன நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக செயற்குழு ஒன்றை நியமித்தவர்.

b. பசவக்குளம், திசவாவி போன்ற குளங்களைப் புனரமைந்தவர்

c. வளவகங்கை, உடுகிரிவலவைப் பிரதேசத்தில் நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைத்தவர்.

(ii) 1818 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

kalvi.lk

(iii) 1818 ஆம் ஆண்டுப் போராட்டம் தோல்வி அடைந்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iv) 1818 ஆம் ஆண்டுப் போராட்டத்தின் விளைவுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

6.

(i) இலங்கையில் சமய தேசிய மறுமலர்ச்சிக் காலத்தில் பௌத்த சமய மறுமலர்ச்சியில் ஈடுபட்ட மூவரின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன்னின்று உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமகநாவலர் அவர்களின் மூன்று பணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) எம்.சி சித்திலெப்பை இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iv) ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்ற மூன்று இடங்களைத் தருக. (03 புள்ளிகள்)

7.

(i) 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக இந்தியாவில் ஏற்பட்ட கலகம் எது? (02 புள்ளிகள்)

(ii) கலகம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த நான்கு விடயங்களைத் தருக. (04புள்ளிகள்)

(iii) கலகம் தோல்வியடைந்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03புள்ளிகள்)

(iv) இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

kalvi.lk

தரம் 9 வரலாறு பகுதி I

விடைகள்

| வினா இலக்கம் | விடைகள் | வினா இலக்கம் | விடைகள் | வினா இலக்கம் | விடைகள் | வினா இலக்கம் | விடைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 6. | 2 | 11. | 1 | 16. | 3 |
| 2. | 3 | 7. | 1 | 12. | 3 | 17 | 3 |
| 3. | 4 | 8. | 1 | 13. | 2 | 18. | 1 |
| 4. | 3 | 9. | 2 | 14. | 4 | 19. | 2 |
| 5. | 1 | 10 | 3 | 15. | 1 | 20. | 1 |

பகுதிII

விடைகள்

1. பமா
   i. E
   ii. F
   iii. B
   iv. D
   v. C
   vi. A (12 புள்ளிகள்)

2.

(i) ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன்
ஜெனரல் ஜெராட் ஹல்பேட்
கலன் அல்பஸ்
கொர்னேலியஸ் டெகல்

(ii) 1602– முதலாம் விமலதர்மசூரியன்
1656 - இரண்னடாம் இராஜசிங்கன்
1721 - ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன்

(iii)

- பேர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு கண்டி மன்னனுக்கு உதவி செய்ய ஒல்லாந்தர் உடன்படல்
- போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போரில் ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை கறுவா, மிளகு, தேன்மெழுகு என்பவற்றின் மூலம் வழங்குவதற்கு மன்னன் உடன்படல்.
- யானைகள் தவிர கண்டி இராசதானியின் ஏனைய வர்த்தகப் பொருட்களைப் பணம் கொடுத்துப் பெறுவதற்கான ஏகபோக உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்குதல்
- போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் மன்னன் விரும்பினால் ஒல்லாந்தரது படையை வைத்திருப்பதற்கு மன்னன் உடன்படல்.

(iv)

- பர்மாவிலிருந்து உபசம்பதா விழாவிற்கான பிக்குகளை மன்னன் அழைத்து வர ஒல்லாந்தர் கப்பல்களை வழங்கியமை.
- பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மன்னன் நீக்கியமை
- மன்னனின் கறுவா, பாக்கு, யானைகள் என்பவற்றை வர்த்தக சங்கத்தின் மூலம் பணம் கொடுத்துப் பெறுவதற்கு உடன்படல்.

3.

Education கல்வி අධ්‍යාපන

(i)

- கொழும்புக் கொமாண்டரி
- காலிக் கொமாண்டரி
- யாழ்ப்பாணக் கொமாண்டரி

(ii)

- சிவில் நிர்வாகம்
- இராணுவ நிர்வாகம்
- வர்த்தகப் பிரிவு

(iii) கோறளைகள், பற்றுக்கள்

(iv) கொழும்பு, களுத்துறை, அளுத்கம, மாத்தறை

4.

(i)

- இலங்கையின் அமைவிடம்
- திருகோணமலைத் துறைமுகம்
- வர்த்தக நடவடிக்கைகளில் பெற்றிருந்த முக்கியத்துவம்

(ii) பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் ஆட்சியை மேற்கொள்ளும் போது, பொருளாதார நடவடிக்கைகள் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியாலும், அரசியல் நடவடிக்கைகள் பிரித்தானிய அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டமை இரட்டை ஆட்சி எனப்படுகின்றது.

(iii)

- கரையோர மக்கள் கண்டி மன்னனையே தமது மன்னனாகக் கருதியமை
- கரையோரத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு கண்டி மன்னன் உதவிபுரிவதாக ஏற்பட்ட சந்தேகம்
- கொழும்பு – திருகோணமலைத் தரைமார்க்கத் தொடர்புகளுக்குக் கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை
- பிரித்தானியாவிற்கு எதிராக கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அச்சம்.

(iv)

- மழைகாலம் ஆரம்பித்தமை
- உணவுத் தட்டுப்பாடு
- மலேரியா போன்ற தொற்று நோய்கள்

5.

i.

a. ஆளுநர் ஹென்றிவோட்
b. ஆளுநர் வில்லியம் கிரகெரி
c. ஆளுநர் ஆதர்கோடன்

ii.

- அரசன் இல்லமை
- பிரித்தானியரின் கீழ் பௌத்த சமயம் அழிந்து விடும் என்ற அச்சம்
- தேசியப் பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் பிரித்தானியர் மதிக்காமை, அவர்களது நிர்வாக சட்டதிட்டங்கள்.
- பிரதானிகளின் அதிகாரங்கள், சலுகைகள், வருமான வழிகள் பாதிக்கப்பட்டமை.
- சிங்களவரைப் பெரும்பாண்மையாகக் கொண்ட வெல்லச பிரதேச மடிகே முஹாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் என்னும் முஸ்லீம் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் அதனை சிங்கள மக்கள் எதிர்த்தமையும்.

iii.

- போராட்டம் முறையாகத் திட்டமிடப்படாமை
- ஆங்கிலேயரின் கடுமையான அடக்கு முறைக்கு போராளிகளால் முகங்கொடுக்க முடியாமை
- போராட்டத் தலைவர்களிடையே காணப்பட்ட தனிப்பட்ட மனஸ்தாபங்கள்

- ஆங்கிலேயரின் ஆயுத பலம்
- அரசனாகமுன்வந்த துரைசாமி போலியானவன் எனத் தெரிய வந்தமை.

iv.

- போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய தலைவர்கள் இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டமை.
- எஹலபொல உள்ளிட்ட தலைவர்கள் மொரிசியஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்டமை.
- 1815 கண்டி ஒப்பந்தம் கைவிடப்பட்டு 1818 கண்டிப் பிரகடனம் மூலம் ஆங்கிலேயர் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.
- கண்டிப் பிரதானிகளின் அதிகாரம், சலுகைகள் நீக்கப்பட்டு அவை பிரித்தானிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

6.

i.

அநகாரிக தர்மபால, ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், மீகெட்டுவத்த குணானந்த தேரர்(தொடர்புடைய ஏனைய பெயர்கள்)

ii.

- இந்து மத மறுமலர்ச்சிக்குத் தலைமைத்துவத்தை வழங்கியமை.
- இந்து சமயப் பாடசாலைகளை அமைத்தமை.
- இந்துசமய, கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டமை.
- பாலபாடம் போன்ற பெயர்களில் நூல்களை எழுதியதோடு கந்தபுராணம், பெரியபுராணம் என்னும் நூல்களைப் பதிப்பித்தமை.

iii.

- முஸ்லீம் நேசன் என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார்.
- முஸ்லீம் கல்விச் சபையை ஆரம்பித்தார்.
- மருதானை சாஹிராக் கல்லூரி மூலம் சமயம் சார்ந்த பொதுக் கல்வியை வழங்குவதற்றுக் காரணமானார்.

iv. பத்தேகம, வராகொட, உதம்விட, கம்பளை, பாணந்துறை

7.

i. சிப்பாய் கலகம்

ii.

- ஆங்கிலேயர் இந்தியாவில் பிரதேசங்களைக் கைப்பற்றிய போது பின்பற்றிய கொள்கைகள்
- பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் இலாப நோக்கம் கருதிய ஆட்சிமுறை
- வர்த்தகக் கம்பனியின் பொருளாதாரக் கொள்கைகள்
- சுதேசிகளின் பாரம்பரியம், நம்பிக்கைகளைக் கவனத்தில் கொள்ளாமையும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு பிரித்தானியரின் ஆதரவும்
- சிப்பாய்களிடம் காணப்பட்ட ஆங்கிலேயர் தொடர்பான வெறுப்பு

iii. தா

- திட்டமிடல் இன்மை
- ஒருங்கிணைந்த தலைமைத்துவம் இன்மை
- போராயுதங்கள் இன்மை
- தகவல் தொடரபாடல் சிறப்பாக இல்லாமை
- இந்தியர்களில் ஒரு பகுதியினர் ஆங்கிலேயருக்கு சார்பாக இருந்தமை

iv. பெருந்தெருக்கள், தகவல்தொடர்பாடல் வசதிகள் வளர்ச்சியடைந்தமை.

- ஆங்கிலேயர் இந்தியர்களை அடிமைகளாக நடத்தியமை
- மேலைத்தேச கல்வி கற்ற இந்தியர்கள் சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் தொடரபான அறிவு கிடைத்தமை
- கல்விகற்ற மத்திய தர வர்க்கத்தினர் பல்வேறு இயக்கங்களைத் தோற்றுவித்தமை

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457